## திராவிட இயக்க இதழ்கள் - ‘ஸ்த்ரீதர்மா’




இந்தியாவின் முதல் பெண் மருத்துவரும், திராவிட இயக்க ஆளுமைகளில் ஒருவருமான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள், ஆசிரியராக இருந்து நடத்திய ஆங்கில இதழ் ‘ஸ்த்ரீ தர்மா’.

அன்றைய மதராஸ் மாகாணத்தில் இருந்த பெண்ணியவாதிகள் ‘இந்திய ஸ்த்ரீகள் சங்கம்’ என்ற ஓர் அமைப்பைத் தொடங்கி, நடத்தி வந்தனர். அந்த அமைப்பின் சார்பாக, 1918- ஆம் ஆண்டு ஜனவரி முதல் ‘ஸ்த்ரீ தர்மா’ என்ற இதழ் தொடங்கப்பட்டது. இது மாத இதழாக வெளிவந்தது.

இந்த இதழுக்கு 1931-ஆம் ஆண்டு வாக்கில் முத்துலட்சுமி அம்மையார் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். 1935-கள் வரை இந்த இதழ் வெளிவந்திருக்கலாம் என்று அறியப்படுகிறது.

உலக அளவிலான பெண் விடுதலை, அவர்களின் மேம்பாடு, சங்கச் செய்திகள் ஆகியவையே அதிக அளவில் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன. சில முக்கியமான கட்டுரைகள் தமிழ், தெலுங்கு மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு, இதழில் வெளியிடப்பட்டன.

இந்தியா முழுமைக்குமான பெண்கள் இதழாக ஸ்திரீதர்மா வெளிவந்தது. முதலில் காலாண்டு இதழாகவும்,சில ஆண்டுகளுக்குப் பின் மாத இதழாகவும் வெளியானது. தொடக்க காலத்தில் பன்னிரண்டு பக்கங்களுடன், 2 அணா விலையிலும், 1930-ஆம் ஆண்டுகளில் 48 முதல் 60 பக்கங்கள் கொண்ட இதழாக 8 அணா விலையிலும் வெளியானது.

தேவதாசி ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கு, இந்த இதழ் செய்த பங்களிப்பு மிகவும் முக்கியமானது.

## ஃப்ளாஷ்பேக்



### நெல்லையில் முத்தமிழறிஞருக்கு வரவேற்பு!



பா.பாலகுமார்

1991-ஆம் ஆண்டு நெல்லையில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையேற்ற மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்காக, நெல்லைக்கு வருகை தந்த டாக்டர் கலைஞர் அவர்களை, என்னுடைய தாத்தா ‘நகைச்சுவைத் தென்றல்’ புளியங்குடி க.பழனிச்சாமி, கழக உடன்பிறப்புகளுடன் சேர்ந்து வரவேற்ற போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. படத்தில், அன்றைய நெல்லை மாவட்டச் செயலாளர் டி.ஏ.கே.இலக்குமணன், நாடாளுமன்ற உறுப்பினர் வைகோ, ஏ.எல்.சுப்பிரமணியன், தூத்துக்குடி பெரியசாமி, டி.பி.எம்.மைதீன்கான், சு.குருநாதன் ஆகியோர் உள்ளனர்.

**- பா.பாலகுமார்,**
**மாநில மாணவர் அணித் துணைச் செயலாளர்,**
**மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ‘திராவிட நாடு’ அபராதம்!

1950-ஆம் ஆண்டு, ‘திராவிட நாடு’ பத்திரிகை ரூ.3,000 ஜாமீன் கட்ட வேண்டும் என அரசு அறிவித்ததை எதிர்த்து வழக்கு தொடர்ந்தனர். கழகத் தோழர்கள் வசூலித்து, அனுப்பிய தொகையை பேரறிஞர் அண்ணா கட்டி விட்டார். வழக்கை விசாரித்த நீதிபதிகள் ராஜமன்னார், சந்திரா ரெட்டி ஆகியோர் அரசின் ஆணையை ரத்து செய்து, தொகையைத் திருப்பியளிக்க உத்தரவிட்டனர். பணம் கிடைத்ததும் நன்கொடை அளித்தவர்களுக்கே திருப்பி அனுப்பி வைத்தார் அண்ணா.

## முதன் முதலில் 27

**ந.வினோத்குமார்**

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...**

# ‘புல்லட்’ தூதுவர்கள்!







“தேர்தல் காலம் என்றால், ஊரில் திருவிழா தொடங்கிவிடும். தி.மு.க.வின் பிரபல தலைமைக் கழகப் பேச்சாளர் ‘நன்னிலம் நடராஜன்’ எனக்கு ஒண்ணுவிட்ட தாத்தா. ஊரில், எங்கள் வீட்டில் இருந்து நாலைந்து வீடுகள் தள்ளித்தான் அவர் வீடு.

தெருவில் ‘டபுடுபு டபுடுபு’வென புல்லட் சத்தம் கேட்டால், பொடிசுகள் நாங்கள் தெறித்துத் தெருவுக்கு ஓடிவந்து, ‘கலைஞர் வாழ்க... கலைஞர் வாழ்க...’ எனக் கத்துவோம். ‘சுட்டிக் கழுதைகளா...’ என்று ‘தேவர் மகன்’ சிவாஜி மாதிரி அவர் ஆரஞ்சு மிட்டாய்களை அள்ளி வீசுவார். எங்கள் ஊருக்கு அவர்தான் ‘கறுப்புக் கலைஞர்’.

அவர் பிறந்த நாளைக்குத் தெருவே கரை வேட்டிகளால் களைகட்டும். ‘பாளையங் கோட்டைச் சிறையினிலே, பாம்புகள் பல்லிகள் நடுவினிலே...’ என ஸ்பீக்கர் அலறும். கோ.சி.மணி, பழனிமாணிக்கம், ‘பூண்டி’ கலைச்செல்வன் எனக் கட்சிப் புள்ளிகள் எல்லாம் வியர்வை வழிய நிற்பார்கள். ஆரஞ்சு மிட்டாய்களுக்குப் பதில் அன்று கேக் கிடைத்த சந்தோஷத்தில் நாங்கள் எகிறி எகிறி ‘வாழ்க...’ சொல்வோம்.”

**சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டுக்கு கன்னியாகுமரியிலிருந்து தொடங்கிய ‘புல்லட் பேரணி’ எடுத்துக்காட்டியது.**

இது திரைப்பட இயக்குநர் ராஜுமுருகன் தனது ‘வட்டியும் முதலும்’ நூலில் தீட்டியுள்ள சித்திரம். இதைப் படிக்கும்போதே நமது வட்டாரத்தில் உள்ள ஏதோ ஓர் உடன்பிறப்பின் நினைவு நமக்கு வந்துவிடுகிறது இல்லையா..? அந்த உடன்பிறப்பு பெரும்பாலும் ‘புல்லட்’ பைக்கில் வரும் காட்சி மனதில் ஓடினால், அது திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கி வைத்த மரபு என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

ஆம்... ‘புல்லட்’ வண்டிகளைக் கூட கழகப் பிரச்சாரத்தின் அடையாளமாக மாற்றிய பெருமை நமது கழகத்துக்குத்தான் உண்டு.

வெள்ளைச் சட்டையும், கரை வேட்டியும் கட்டிக் கொண்டு புல்லட் வண்டிகளில் ஒன்றியச் செயலாளரோ அல்லது கிளைக் கழக நிர்வாகியோ தங்கள் ஊரைச் சுற்றி வருவார்கள். அவர்களது சட்டைப் பைகளில் கழகத் தலைவர் படங்கள் இருக்கும். டீக்கடையிலோ, பஞ்சாயத்து அலுவலகத்திலோ வண்டியை நிறுத்திவிட்டு, அங்குள்ளவர்களுக்கு, ‘வணக்கம்’ வைத்துவிட்டு, சிலரைப் பெயர் சொல்லி அழைத்து, அவரைப் பற்றியும், அவரது குடும்பத்தினரின் நலனைப் பற்றியும் விசாரிப்பார். அங்கே யாரேனும் எதைப் பற்றியேனும் குறை சொன்னாலோ, உதவி கேட்டாலோ ‘ஆகட்டும்... செஞ்சிடுவோம்... பார்த்துக்கலாம்...’ என்று நம்பிக்கை வார்த்தைகளைச் சொல்வார். வண்டியில் அவர் பின்னால் அவரது உதவியாளர் யாரேனும் வந்தால், அவரிடம் சொல்லி மனுக்கள் வாங்குவார்.

அடுத்து கட்சி அலுவலகம், அரசு அலுவலகம் என்று அவரது பயணம் அந்த புல்லட்டிலேயே தொடரும். அந்த வண்டியில் செல்லும்போது ஒரு கம்பீரம் தோன்றும். அது எப்படியான கம்பீரம் என்றால், அன்பில் தர்மலிங்கம் அவர்கள் ஒரு முறை நீதிமன்றத்தில் சொன்னது போல... “மாவட்டச் செயலாளர் என்றால், ஜில்லா கலெக்டர் போல..!”

அந்த கம்பீரம் இன்று இளைஞர் அணியிலும் உண்டு. அதைத்தான் சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டுக்கு கன்னியாகுமரியிலிருந்து தொடங்கிய ‘புல்லட் பேரணி’ எடுத்துக்காட்டியது.


...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** 27

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# மொழி வழி அதிகாரம்!




200 ஆண்டுகளாக பிரிட்டன் ஆளுகையின் கீழ், காலனி நாடாக இருந்தது, இந்தியத் துணைக் கண்டம். அந்த இடைப்பட்ட ஆண்டுகளில் காலனிய அரசு நம் மீது செலுத்திய ஆதிக்கம் இன்றுவரை நம் சமூக-அரசியல்-பொருளியல்-கலாச்சார வெளியை விட்டு நீங்கவில்லை.

காலனிய அரசின் வன்முறைகள், வெளிப்படையாக விவாதிக்கப்பட்டாலும், அது செலுத்திய மறைமுக அதிகாரம் பெரிதாக விவாதிக்கப்பட்டதில்லை. அந்த மறைமுக அதிகாரம், மாயக் கவர்ச்சி கொண்டது.

**‘சிங்கங்களுக்கென்று சொந்த வரலாற்றாசிரியர்கள் கிடைக்கும்வரை, வேட்டையாடலின் வரலாறு எப்போதும் வேட்டைக்காரனையே பெருமைப்படுத்தும்!’**

துப்பாக்கிக் குண்டுகளின் வழியே ஆட்சி அதிகாரத்தை நிறுவிய காலனியவாதிகள், கண், காது, நாக்கு போன்ற புலன்களின் வழியே மறைமுக அதிகாரத்தை நிறுவியதைப் பேசுகிறது ‘வெள்ளை நாக்குகளும் தமிழ் காதுகளும்’. குறிப்பாக, மொழியின் வழியே, அதிகாரம் எப்படி நிறுவப்பட்டது, என்பதைப் பேசுகிறது.

இதுவரை பேசுபொருளாகாமல் இருந்த, ‘மொழியின் வழியே அதிகாரத்தை நிறுவுதல்’ என்கிற பார்வையை, தமிழ் மொழியை வெள்ளை அதிகாரிகள் எப்படி கையாண்டனர், என்பதை விளக்குகிறது.

காலனிய காலத்தில் தமிழ் மொழியானது எப்படி ஆங்கிலேயர்களால் கற்றுக்கொள்ளப்பட்டு அதிகாரம் செலுத்தும் மொழியாகப் பயன்படுத்தப்பட்டது, அதற்காக ஏற்படுத்தப்பட்ட நாடகத்தன்மை கொண்ட உரையாடல் நூல்கள் எப்படியானவை? அவற்றைத் தயாரித்த சுதேச மக்கள் எவர்? காலனிய அதிகாரத்தின் கீழ் செயல்பட்ட விளிம்புநிலை மக்களின் வரலாறு எத்தகையது? ஆகியவற்றை இந்த நூலில் பேசி இருக்கிறார் நூலாசிரியர் ந.கோவிந்தராஜன். இந்த நூலை, ‘க்ரியா பதிப்பகம்’ வெளியிட்டுள்ளது.

ஒரு சிக்கனமான ஆங்கிலேய துரையும், துரைசானியும் குறைந்த பட்சம் 27 வேலையாட்களை அன்றாட உதவிக்காகப் பயன்படுத்தினார்கள். (சிக்கனத்தைக் கடைப்பிடிக்காத துரைகளின் வீடுகளில் எவ்வளவு வேலையாட்கள் இருந்திருப்பார்கள் என்பது உங்கள் கற்பனைக்கே!) இவர்களில் பெரும்பாலானோர் மலிவான கூலிக்குப் பணியாற்றிய சுதேசிகள். கிளார்க், முனிசீப், துபாஷி, பட்டலர் போன்ற அதிகாரிகளும் இவர்களுள் இருந்தார்கள், நாவிதர், சலவைக்காரர், சமையல்காரர், பல்லக்குத் தூக்கிகள், தையற்காரர், ஆயாக்கள் போன்ற விளிம்புநிலை மக்களும் இருந்தனர். இவர்கள் அனைவரின் மீதும் துரைகள் மொழியின் மூலம் அதிகாரம் செலுத்தினர். சுதேச மக்கள் தாங்கள் சுரண்டப்படுகிறோம் என்பது தெரியாமலே சுரண்டப்பட்டனர். இத்தகைய மென் சுரண்டலின் வரலாற்றை மிகச் சுவாரசியமாக நமக்களிக்கிறது இந்நூல்.

‘சிங்கங்களுக்கென்று சொந்த வரலாற்றாசிரியர்கள் கிடைக்கும்வரை, வேட்டையாடலின் வரலாறு எப்போதும் வேட்டைக்காரனையே பெருமைப்படுத்தும்’ என்ற ஆப்பிரிக்கப் பழமொழி இந்நூலின் மைய சரடாக இருக்கிறது. அதனாலேயே இந்தப் புத்தகம் வேட்டையாடப்பட்ட சிங்கங்களின் வரலாற்றைப் பதிவு செய்கிறது.

வேட்டைக்காரன் எழுதிய வரலாற்றை மீள்பார்வையிடுகிறது. அதில் நிரம்பி இருக்கும் வஞ்சம் நிறைந்த வேட்டையையும் வேட்டைக்காரனையும் கேள்விக்குட்படுத்துகிறது.


மொழியின் துணை கொண்டு அதிகாரம் செலுத்திய காலனியம், நம் அடையாளங்களில் மறைமுகமாக எப்படி ஆதிக்கம் செலுத்தியது, தமிழ்-திராவிடம் போன்ற அரசியல் அடையாளங்களுக்கான தோற்றுவாய் எதிலிருந்து உருப்பெற்றன, உள்ளிட்ட புதிய பார்வைகளை விளக்கும் இந்நூல், தேடல் மனம் கொண்டவர்களுக்கு வாசிப்பு விருந்து வைக்கும்.

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

589

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131